# மாலை தீப்பொறி

MALAE THEEPORI






2023 ஆகஸ்ட் 16-31 தொகுதி 22 இதழ் 2 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## அகில இந்திய மாணவர் கழகத்தின் 10வது அகில இந்திய மாநாடு

### 09-11 ஆகஸ்ட் 2023 - கொல்கத்தா





## இளைய இந்தியாவிற்கு கல்வி வேண்டும்!
## கவுரவமான வேலை வேண்டும்!
## மதவெறிக் கும்பல் வேண்டாம்!

நிலம், வேலை, கவுரவம்
ஜனநாயகம் பெறப் போராடுவோம்!
கார்ப்பரேட் காவிப்பாசிச மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்!

# பரப்புரைப் பயணம்

செப்டம்பர் 2 (தோழர்கள் சந்திரகுமார் – சந்திரசேகர் நினைவுநாள்)
முதல் செப்டம்பர் 13 (தோழர் சுப்பு நினைவுநாள்) வரை

மணலூர் (தஞ்சை) தொடங்கி மாடக்கோட்டை
(சிவகங்கை) வரை



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்)**
**அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கம்**







திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நான்குநேரி சின்னதுரை மற்றும் சந்திரா செல்வி, அவர்களது தாயார் மற்றும் குடும்பத்தாரை இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி, மாலெ தீப்பொறி ஆசிரியர் ஜி.ரமேஷ், ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் டி.சங்கரபாண்டியன், இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சுந்தர்ராஜ், மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கா.கணேசன் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் தோழர் வீ.கருப்பசாமி, தோழர் அந்தோனிராஜ், பேச்சிராஜா ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

2023 ஆகஸ்ட் 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 2

## உள்ளே


| | |
|---|---|
| சட்டபூர்வமாக்கப்பட்ட சர்வாதிகாரம் | 4 |
| மார்க்ஸ் புகழ் நீடூழி வாழ்க | 7 |
| மணிப்பூர் - உண்மை நிலவரம் | 9 |
| இன்னொரு சாதியாதிக்கப்படுகொலை | 14 |
| தலைவிரித்தாடும் சாதியாதிக்கம் | 20 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com



**தலையங்கம்**

# நீட் (தற்)கொலைகளுக்கு ஒன்றிய ஆட்சியும் ஆளுநருமே பொறுப்பு

அன்று அனிதா தொடங்கி, இன்று ஜெகதீஸ்வரன் வரை மாணவர்கள் நீட் தேர்வினால் மரணமடைந்துள்ளார்கள் என்றால், ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகரனும் தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். நீட் தேர்வில் 400 மார்க் எடுத்தும் அரசு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. பணம் இல்லாததால் தனியார் கல்லூரியில் சேரமுடியவில்லை. மருத்துவர் ஆக வேண்டும் என்கிற தன்னுடைய லட்சியம் நிறைவேறாததால் மாணவர் ஜெகதீஸ்வரன் இறந்து போனார் என்றால், அந்த சோகம் தாளாமல் அவருடைய தந்தையும் தற்கொலை செய்து கொண்டார். ஆனால், நீட் தேர்வு தேவையில்லை என்று தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றி இரண்டு ஆண்டுகள் ஆன பின்பும் அந்த தீர்மானத்திற்கு ஒப்புதல் தராமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அதுமட்டுமின்றி, நீட் தொடர்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைச் சந்தித்து, நீட் தேர்வை ரத்து செய்யும் தீர்மானத்திற்கு நான் கையெழுத்துப் போடமாட்டேன் என்று அடாவடியாக பொது வெளியில் பேசுகிறார். தமிழ்நாடு மாநில அரசின் பொதுப் பாடத் திட்டத்தினை பல்கலைக் கழகங்கள் அமல்படுத்தத் தேவையில்லை என்று அறிவித்துள்ளார். டிஎன்பிஎஸ்எஸ்சி தலைவர், உறுப்பினர்களை நியமிக்கும் தமிழ்நாடு அரசின் பரிந்துரையையும் திருப்பி அனுப்பியுள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி. ஆளுநரின் செயல்பாடுகள் தமிழ்நாட்டிற்கு எதிராகவே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. ஜெகதீஸ்வரன் கூட படித்த ஒரு மாணவர், நான் நீட் தேர்வில் குறைவான மார்க்தான் வாங்கினேன், ஆனால் ஜெகதீஸ்வரன் நல்ல மார்க் பெற்றான், என் தந்தை ரூ.25 லட்சம் கட்டி என்னை தனியார் கல்லூரியில் சேர்த்துவிட்டார். ஆனால், ஜெகதீஸ்வரனுக்கு அதற்கான வசதியில்லை. நீட் கோச்சிங்கிற்கு செலவு செய்ய வேண்டும், நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், லட்சணக் கணக்கில் செலவு செய்யக் கூடிய நிலையில் உள்ளவர்களால்தான் டாக்டராக முடியும் என்று மிகவும் ஆதங்கத்தோடு பேசினார். நீட் தேர்வு தகுதிக்குதான் மதிப்பு கொடுக்கிறது, இதனால் கட்டணக் கொள்ளை தடுக்கப்படுகிறது என்பது சுத்தப் பொய் என நிரூபணமாகியுள்ளது. இங்கு போதுமான மருத்துவர்கள் இருக்கும்போது, எதற்காக 25 லட்ச ரூபாய் செலவு செய்து மருத்துவம் படிக்க வேண்டும் என்று காக்கி உடையைக் கழட்டிவிட்டு காவிக்கு மாறியவரான அடுத்த ஆணவக்காரர் அண்ணாமலை கேட்கிறார். அதற்கு அந்த மாணவர், இங்கு நல்ல அரசியல்வாதிகள் பலர் இருக்கும்போது, நீங்கள் எதற்காக அரசியலுக்கு வந்தீர்கள் என்று கேட்டதாக சமூக வலைத் தளங்களில் வைரலானது. தமிழ்நாட்டில் நீட் தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களின் தலை முதல் கால் வரை சோதனை செய்து, அவர்களின் மனநிலையையே மாற்றி சித்தரவதை செய்கிறார்கள். நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற முடியாமல் மாணவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். ஆனால், நீட் தேர்வே எழுதாதவர்கள் எல்லாம் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கிறார்கள் பாஜக ஆளும் மாநிலங்களில். திரிபுராவில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 3536 ஆனால், தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 88,889 என்றும் உத்ரகாண்டில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 12047, தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 37,301 என்று செய்திகள் சமூக வலைத் தளங்களில் வருகின்றன. இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால், தமிழே தெரியாதவர்கள் தமிழ் மொழித் தாளில் தேர்ச்சி பெற்றதாக அறிவித்தவர்கள்தான் இவர்கள். தேர்விற்கான கேள்வித் தாளை முன்னாலேயே வெளி யிட்டவர்கள்தான் இவர்கள். ஆர்எஸ்எஸ்–பாஜக திட்டமிட்டு, தமிழ்நாட்டை பழி வாங்குகிறது, வஞ்சிக்கிறது என்பது வெளிப்படை யாகவே தெரிகிறது. ஆனால், பிரதமர் மோடியும் மற்றவர்களும் தமிழ்நாட்டின் மீது, தமிழ் மொழியின் மீது மிகுந்து அன்பு கொண்டவர்கள் போல் நன்கு நடிப்பார்கள். அடுத்த ஆண்டில் நீட் தேர்வு இருக்காது என்று தமிழ்நாட்டை ஆளும் கட்சியினர் அறிவித்துள்ளார்கள். ஆளுநரின் ஒப்புதல் இல்லாமலே கூட அதை அமல்படுத்தமுடியும். அதற்கான நடவடிக்கையில் உடனடியாக இறங்க வேண்டும் திமுக அரசு. இல்லையென்றால், பாஜகவின் நயவஞ்சகச் செயலுக்கும் தமிழ்நாட்டு மாணவர்கள், பெற்றோர்கள் பலியாவதைத் தடுக்க முடியாது என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் நல்ல மருத்துவம் கிடைக்கும், நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்கிற நிலை எதிர்காலத்தில் இல்லாமல் போகும். நீட் தேர்வு முறையை நீட்டிக் கொண்டு போகாமல் உடனடியாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும். ❑

# ஜனநாயக இந்தியா, சட்டப்பூர்வமாக்கப்பட்ட சர்வாதிகாரத்தை சகித்துக் கொண்டிருக்காது

*சுதந்திரத்தின் 76 வது ஆண்டு விழாவை இந்தியா கொண்டாடும் போது, பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டையிலிருந்து ஆற்றிய தனது பத்தாவது சுதந்திர தின உரையை தேர்தலுக்கான மற்றுமொரு கடும் முயற்சிக்கான உரையாக மாற்றினார். ஊழலுக்கும், குடும்ப அரசியலுக்கும் எதிரான அவரது சோர்வுமிகுந்த வாய்ச்சவடால், அதிகரித்து வரும் மக்களின் கோபத்தையும், அவரது பாசிச ஆட்சிக்கு எதிராக எழுந்து வரும் அரசியல் ஒற்றுமையின் அறிகுறிகளையும் பற்றி அவருக்கு வளர்ந்து வரும் பயத்தையே வெளிப்படுத்தியது. அவர் ஏற்கனவே அடிக்கல் நாட்டிய திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்கு அடுத்த தேர்தலுக்குப் பிறகு மீண்டும் வருவேன் என்று தற்பெருமையாகக் கூறுவது கூட, ஒவ்வொரு நாளும் அவரது வெற்றி அவரது கண்ணெதிரே நழுவிக் கொண்டிருக்கிறது என்ற அச்சத்தையே வெளிக்காட்டியது. 'இந்திய மக்களாகிய நமக்கு', இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அரசமைப்புச் சட்ட அடித்தளத்தின் மீதும், இந்தியாவின் பன்முக சமூகக் கட்டமைப்பின் கூட்டு கலாச்சாரத்தின் மீதும் வெட்கக்கேடான வகையில் அதிகரிக்கப் போகும் தாக்குதல்களை வரும் நாட்களில் காண வேண்டியிருக்கும் என்றே இதற்கு அர்த்தமாகும்.*

**குடிமக்களின் தனிப்பட்ட, கூட்டு உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, அரசுக்குப் பெரும் அதிகாரங்களை வழங்கவும், அரசாங்கத்தின் கொள்கைகளை கேள்வி கேட்கவும் எதிர்க்கவும், மாற்றத்துக்காக, நீதிக்காக, போராடுவதற்குமான மக்களின் உரிமை என்னும் ஜனநாயகத்தின் உயிர்நாடியை வலுவிழக்கச் செய்வதுமே அதன் திட்டமாகும்**

*இந்தத் தீவிரமாகும் போரின் அறிகுறிகள் இதைவிட வெளிப்படையாக இருக்கவே முடியாது. நாடாளுமன்றத்தின் ஒட்டுமொத்த மழைக்கால கூட்டத் தொடரும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதான மோடி ஆட்சியின் முழுமையான அவமதிப்பையும், இந்தியாவை சட்டப்பூர்வமாக்கப்பட்ட சர்வாதிகாரத்தில் சிறைவைக்க வளர்ந்து வரும் உந்துதலையும் கண்டது. பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'மோடிமோடி' என்ற தங்கள் உரத்த முழக்கங்களுடன் அவரைப் பாராட்டுகின்றனர்; அதேவேளையில் பிரதமரோ நாடாளுமன்றத்தை அவரது அரசவையாக (தர்பாராக) நடத்தும் ஒரு பேரரசரைப் போலவே நடந்து கொள்கிறார். நாடாளுமன்ற வளாகத்திற்குள்ளேயே, அதன் அருகாமையிலேயே இருந்து கொண்டு பிரதமமந்திரி நாடாளுமன்றத்தை தவிர்த்த விதமே மிகத் தெளிவான அறிகுறியாகும். பிரதமரை அவைக்கு கொண்டு வருவதற்காக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைக்க வேண்டியிருந்தது என்பதை நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியாக பார்க்கப்பட வேண்டும்.*

*இந்த அறிகுறிகளையெல்லாம் விட, நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட மசோதாக்களின் சாராம்சம் குறித்து நாம் நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும். ஒடிசாவின் பிஜு ஜனதா தளம், ஆந்திராவின் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி போன்ற இரண்டு பெரிய பிராந்திய ஆளும் கட்சிகள்*

அரசாங்கத்துடன் இணைந்ததால் மட்டுமே டெல்லி மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது; கூட்டாட்சி கட்டமைப் பிற்கு இது ஒரு மோசமான பின்னடைவாகும். இந்த மசோதாவை டெல்லிக்கான குறிப்பான சிறப்பு மசோதாவாகக் கருதி ஆதரித்த பிராந்தியக் கட்சிகள், ஆகஸ்ட் 2019 இல் ஜம்முகாஷ்மீரின் அரசமைப்புச் சட்ட உரிமைகள் மறுக்கப்பட்டதை 'தனித்த நிகழ்வாக' எடுத்துக் கொண்டு அதனை ஆதரித்த ஆம் ஆத்மி கட்சி, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அதே தாக்குதல் தன்மீது நடத்தப்படுவதை எதிர்கொள்ள வேண்டியிருந்த அதே தவறைச் செய்கின்றன.

இந்த கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட டெல்லி மசோதா, உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் ஒரு தீர்ப்பை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்த ஒரே நடவடிக்கை மட்டுமல்ல. தலைமைத் தேர்தல் ஆணையரையும் தேர்தல் ஆணையத்தின் மற்ற உறுப்பினர்களையும் நியமிப்பது தொடர்பாக இந்த ஆண்டு மார்ச் மாதம் உச்ச நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்தது. ஒட்டுமொத்த தேர்தல் செயல்பாட்டின் நம்பகத் தன்மைக்கான ஒரு முன்நிபந்தனையாக, தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சியையும் நடுநிலைமை யையும் உறுதிசெய்யும் வகையில், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் அல்லது மிகப்பெரிய எதிர்க்கட்சியின் தலைவர், இந்திய தலைமை நீதிபதி ஆகிய மூன்று பேர் கொண்ட தேர்வுக் குழுவை உச்ச நீதிமன்றம் கட்டாய மாக்கியது. ஆனால் இந்திய தலைமை நீதிபதிக்கு பதிலாக பிரதமரால் பரிந்துரைக்கப்படும் மத்திய அமைச்சரை நியமிக்கும் மசோதாவை மோடி அரசு தற்போது தாக்கல் செய்துள்ளது! வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேர்தல் ஆணையம் போன்ற ஒரு முக்கியமான அரசமைப்புச் சட்ட நிறுவனத்திற்கான உறுப்பினர்களை நியமிப்பதில் நிர்வாகத் துறை முழுமையான அதிகாரம் கொண்டிருக்கும்.

தற்போதுள்ள இந்திய தண்டனைச் சட்டம் (1860), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (1974), இந்திய சாட்சியச் சட்டம் (1872) ஆகியவற்றுக்குப் பதிலாக பாரதீய நியாய் சன்ஹிதா, பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக்ஷ்ய மசோதா என்ற பெயரில் அரசாங்கம் அழைக்க விரும்புகிற மூன்று மசோதாக்களை மழைக்காலக் கூட்டத்தொடரின் கடைசி நாளில் உள்துறை அமைச்சர் தாக்கல் செய்தபோது, நாட்டின் சட்டக் கட்டமைப்பின் மீது மிக மோசமான தாக்குதல் நிகழ்ந்தது. அனைத்து மாநில முதல்வர்கள், ஆளுநர்கள், துணை நிலை ஆளுநர்கள், இந்திய தலைமை நீதிபதி, உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள், பார் கவுன்சில்கள், பல்கலைக்கழகங்கள், சட்டப் பள்ளிகள், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இது சம்பந்தப்பட்ட அனைவருடனும் சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்வதைக் கவனிக்கும் நிபுணர் குழு அதன் பரிந்துரைகளை இறுதி செய்வதற்கு முன், பரந்த அளவிலான ஆலோசனைகளை மேற்கொள்ளும் எனவும், எனவே இந்த செயல்முறை அதிக காலம் எடுக்கும் எனவும் நான்கு மாதங்களுக்கு முன்புதான் உள்துறை இணையமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆயினும் கூட, வாக்குறுதியளிக்கப்பட்ட விரிவான ஆலோசனைகள் பற்றிய எவ்வித அரசாங்கப் பதிவுகளும் இல்லாமல், முழுவதுமாக தவறாக வழிநடத்தும் கூற்றுகளுடன் பரந்த, மோசமான சீர்திருத்தங்களுடன் அரசாங்கம் இப்போது மூன்று மசோதாக்களையும் முன்வைத்துள்ளது!

இந்தப் புதிய சட்டங்கள் காலனிய மரபுக்கும் மனநிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கு மென்றும், தண்டனையை விட நீதிக்கு முன்னுரிமை அளிக்குமென்றும் நாம் நம்ப வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. ஆனால் மசோதாக்களின் விதிகளை உன்னிப் பாகப் பார்த்தால், அந்தக் கூற்றை மறுத்து, குடிமக்களின் தனிப்பட்ட, கூட்டு உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, அரசுக்குப் பெரும் அதிகாரங்களை வழங்கவும், அரசாங்கத் தின் கொள்கைகளை கேள்வி கேட்கவும் எதிர்க்கவும், மாற்றத்துக்காக, நீதிக்காக, போராடுவதற்குமான மக்களின் உரிமை என்னும் ஜனநாயகத்தின் உயிர்நாடியை வலுவிழக்கச் செய்வதுமே அதன் திட்டமாகும் என்பது தெளிவாகிறது.

இரண்டு உதாரணங்களை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஒன்று, காவல்துறையினர் ஒருவரை தற்போது 15 நாட்கள் வரை சிறைக் காவலில் வைத்துக் கொள்ளும் அதிகாரத்திற்கு பதிலாக 60 முதல் 90 நாட்கள் வரை அதனை நீட்டித்துக்கொள்ளலாம். மற்றொன்று, 'தேசத் துரோகம்' என்ற வார்த்தை கைவிடப்பட்டு, கிட்டத்தட்ட அனைத்து விதமான கருத்து வேறுபாடுகளையும் 'பயங்கர வாத நடவடிக்கை' என்று குற்ற மயமாக்கும் வாய்ப்பு விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

நிர்வாகத் துறையின் கைகளில் அனைத்து அதிகாரங்களையும் அதிகளவில் குவிப்பதன் மூலம் கூட்டாட்சி கட்டமைப்பையும், அரசமைப்புச் சட்ட நிறுவனங்களின் தன்னாட்சியையும், நிர்வாகத் துறை, சட்டமியற்றும் துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரச் சமநிலையையும் அரசாங்கம் தினசரி கீழ்மைப்படுத்துகிறது. இப்போது முன்மொழியப் பட்டுள்ள மசோதாக்கள் மூலம், சுதந்திரம் மற்றும் உரிமைகளின் அடிப்படை உணர்வே குடிமக்களிடம் இருந்து பறிக்கப்படும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சங்கிப் படைப் பிரிவின் நேசத்துக்குரிய இந்து ராஷ்டிரா முஸ்லிம்களையும் பிற சிறுபான்மையினரையும் இரண்டாம் தரக் குடிமக்களாக கீழ்நிலைப் படுத்தப் போவது மட்டுமின்றி சுதந்திர குடிமக்கள் என்ற கருத்திற்கே அது சாவு மணியை அடிக்கப்போகிறது. மேலும் காலனிய பாரம்பரியத்தை முடிவுக்கு கொண்டுவருகிறோம் என்ற பெயரில் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்ற குடியுரிமையை காலனிய கால அடிமை நிலையாக மாற்றப்போகிறது! அதனால்தான் "அரசியலில் பக்தி" சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் உறுதியான பாதை என்று பாபாசாகேப் அம்பேத்கர் குறிப்பிட்டார். மேலும் இந்து ராஜ்ஜியம் ஏற்பட்டால் அது இந்த நாட்டிற்கு மிகப்பெரிய பேரழிவாக மாறும் என்று கூறி அதற்கு எதிராக எச்சரித்தார்.

ஊழலுக்கு எதிராகவும் தனது ஆட்சியை ஊழல் இல்லாத ஆட்சி என்றும் நரேந்திர மோடி வாய்கிழியப் பேசிய போதும், அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் நடந்துள்ள ஊழல்களை அம்பலப்படுத்தும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கைகள் இப்போது நம்மிடம் உள்ளன. துவாரகா விரைவுச் சாலையானது, ஒரு கிலோமீட்டருக்கு 18 கோடி ரூபாய் என்ற ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பீட்டிற்கு எதிராக, ஒரு கிலோமீட்டருக்கு 250 கோடி ரூபாய் செலவழித்து, பதினான்கு மடங்கு செலவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டம், 9999999999 என்ற ஒரே கைப்பேசி எண்ணில் பதிவு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான 7,50,000 பயனாளிகள் வடிவிலும், இறந்த நோயாளிகள் மற்றும் இல்லாத மருத்துவமனைகளின் பெயரில் எடுக்கப்பட்ட பெரும் தொகை என்ற வகையிலும் ஒரு மோசடி திட்டமாக அம்பலப்

**மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டம், 9999999999 என்ற ஒரே கைப்பேசி எண்ணில் பதிவு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான 7,50,000 பயனாளிகள் வடிவிலும், இறந்த நோயாளிகள் மற்றும் இல்லாத மருத்துவமனைகளின் பெயரில் எடுக்கப்பட்ட பெரும் தொகை என்ற வகையிலும் ஒரு மோசடி திட்டமாக அம்பலப் படுத்தப்பட்டுள்ளது.**

படுத்தப்பட்டுள்ளது. முதியோர் ஓய்வூதியத் துக்காக ஒதுக்கப்பட்ட நிதி, மோடி அரசின் விளம்பரப் பரப்புரைகளுக்காக திருப்பி விடப்பட்டதெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஸ்வதேஷ் தர்ஷன் யாத்திரைத் திட்டம் என்ற பெயரில் ஒப்பந்ததாரர்கள் பயன்பெறுவதன் மூலம் அயோத்தி மேம்பாட்டுத் திட்டத்தில் மீண்டும் முறைகேடுகள் வெளிவந்துள்ளன.

மோடி அரசாங்கத்தின் பத்தாவது ஆண்டில் நாம் இருக்கிறோம். நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகள், அரசமைப்புச் சட்டத்தின் கோட்பாடுகள், கோடிக்கணக்கான இந்தியர்களின் விருப்பங்கள் மற்றும் உரிமைகளைக் கேலிக்கூத்தாக்கிய, இந்தியாவை அழிவுப் பாதையிலும் பின்னோக்கிய பாதையிலும் இழுத்துச் சென்ற, இந்த அரசாட்சியின் ஒவ்வொரு துறையிலும் இந்தப் பத்து ஆண்டுகள் ஏற்கனவே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. மணிப்பூர் முதல் ஹரியானா வரையிலும் அரசு ஆதரவுடன் நடத்தப்படும் இன அழிப்பு மற்றும் குறிவைத்து இடித்துத் தள்ளும் இயக்கங்களுக்கு சட்டத்தின் ஆட்சி வழிவிட்டுச்செல்கிறது. வாழ்வின் அனைத்து முனைகளிலும் மோடி ஆட்சியால் கட்டவிழ்த்துவிடப்படும் பேரழிவுகளின் சங்கிலித் தொடரை தடுத்து நிறுத்தவும், பாசிச அழிவிலிருந்து இந்தியாவை விடுவிக்கவும், விடுதலைக்கான மாபெரும் காலனிய எதிர்ப்புப் போரிலிருந்து இந்தியா வலிமையையும் உத்வேகத்தையும் பெற வேண்டிய நேரம் இது.

எம்எல் அப்டேட் தலையங்கம் 15–21 ஆக. 2023

**தமிழாக்கம் – செந்தில்**

# மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை உருவப்படம் திறப்பு– அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்வு



மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை அமைப்பு குழு ஒருங்கிணைத்த, மார்க்ஸ் உருவப்படம் திறப்பு – அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்வு டாக்டர் அம்பேத்கர் திடல் விசிக அலுவலகத்தில் ஆகஸ்ட் 12, 2023 அன்று பேராசிரியர் தோழர் அ. மார்க்ஸ் தலைமையில் நடைபெற்றது. மார்க்ஸ் உருவப்படத்தை மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஆர். நல்லக்கண்ணு திறந்து வைத்தார். விசிக தலைவர் தோழர் தொல். திருமாவளவன் எம்.பி, அவர்கள் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியிட்டார்.

அமைப்பு சாரா தொழிலாளர் கூட்டமைப்பு தேசியச் செயலாளர் தோழர் இரா. கீதா, திராவிடர் விடுதலைக் கழகம் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. தனசேகரன், சிலைக் குழு ஒருங்கிணைப்பாளர் தோழர் அ.பா.பாலசுப்பிர மணியன், யூசிபிஐ மாநிலச் செயலாளர் தோழர். பாஸ்கரன், சிபிஐ மாநில துணைச் செயலாளர் தோழர் மு.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர் மதினி செல்வி நிகழ்ச் சியைத் தொகுத்து வழங்கினார்.

மேலும் இந்த நிகழ்வில், சிபிஐ எம்எல் மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம், மாநிலக்குழு உறுப்பினர்கள் அதியமான், திருநாவுக்கரசு, ஆர்ஒய்ஏ தலைவர் ராஜேஷ், பிரபாகரன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், மார்க்ஸ் பற்றி திரு கருணாநிதி எழுதிய கவிதையை பள்ளிச் சிறுமி ஒருவர் வாசித்துக் காட்டினார்.

## மார்க்ஸ் புகழ் நீடூழி வாழ்க!

### (நிகழ்வில் சிபிஐ எம்எல் மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்)

*மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு தமிழ்நாட்டில் ஒரு முழு உருவ வெண்கலச் சிலை நிறுவ வேண்டுமென்று முயற்சி எடுக்கும் தோழர்களுக்கு சிபிஐஎம்எல் கட்சி சார்பாக எனது வாழ்த்துகளை, பாராட்டுதல்களை தெரிவித்து கொள்கிறேன்.*

*தோழர்களே!*

*உலக மாமேதை கார்ல் மார்க்ஸ் இல்லாத ஒரு உலகத்தை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. இந்தச் சமூகம் பல கட்டங்களை கடந்து வந்திருக்கிறது. புராதன பொதுவுடைமைச் சமூகம், ஆண்டான் அடிமைச் சமூகம், நிலப்பிரபுத்துவ சமூகம், முதலாளித்துவ சமூகம் என கடந்து வந்திருக்கிறது. மார்க்ஸ் அவர்கள்*

முதலாளித்துவ சமூகத்தில் வாழ்ந்தவர். இந்த முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் சொல்லொணா துயரத்தை சந்தித்தது; இன்னும் சந்தித்து வருகிறது. பாட்டாளி மக்களுக்கு எப்பொழுது விடுதலை? என்று ஏங்கித் தவித்த போதுதான் பாட்டாளி வர்க்கத்தின் விடிவெள்ளியாய் மாமேதை மார்க்ஸ் வந்து, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை தந்தார்; மூலதனம் என்ற மகத்தான அறிவுக் களஞ்சியத்தைப் படைத்தார்.

.... ஜனநாயகப் புரட்சி வழியாக சோசலிச சமூகத்தை படைக்கும், அதன் பின் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைகளுக்கு முடிவு கட்டி ஒரு பொதுவுடைமை பூவுலகைப் படைக்கும் என்று இந்த மனித குலத்திற்கு நம்பிக்கை தந்த, தலைசிறந்த முதல் மனிதனாக இன்று வரை விளங்கும் மகத்தான தலைவர் மார்க்ஸ்.

தெற்கு ஆசியாவிலேயே முதல் மே நாள் கொடியேற்றிய தமிழகத்தில், "ஆஹாவென்று எழுந்தது பார் யுகப் புரட்சி" என்று பாடிய பாரதி பிறந்த தமிழகத்தில், ரஷ்ய புரட்சியை வரவேற்று ரஷ்யா சென்று வந்து "என்னை இனிமேல் தோழர் என்று அழையுங்கள்" என்றுகூறி பெருமிதம் கொண்ட சமூக நீதித் தலைவர் பெரியார் பிறந்த தமிழ்நாட்டில், மார்க்ஸ் அவர்களுக்கு சிலையில்லை என்பது ஆச்சரியம் படுத்துகிறது, மிகுந்த வருத்தத்தையும் அளிக்கிறது.

மார்க்ஸ் பிறந்து 200 ஆண்டுகளைக் கடந்து விட்டோம்.
அவர் நம்மை விட்டு பிரிந்து 140 ஆண்டுகளைக் தாண்டி விட்டோம். கார்ல் மார்க்ஸ் 'மூலதனம்' படைத்து 150 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.
ரஷ்யப் புரட்சி நடந்து 100 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. தமிழகத்தில் மே நாள் கொடி ஏற்றி 100 ஆண்டுகளாகி விட்டது.

ஆனால் மார்க்சுக்கு சிலை எழுப்ப கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம்.
மார்க்சின் சிலை, சிலை மட்டுமல்ல,
அது ஒரு மகத்தான அரசியல்; பாட்டாளி வர்க்க அரசியல், சமத்துவத்திற்கான அரசியல், இளைய தலைமுறைக்கு கற்றுத் தரப்பட வேண்டிய அரசியல்.
இன்று தமிழகத்தில்,
ஒரு இளம் தலைமுறை மாமன்னன் திரைப் படத்தில் தனது சாதிய அடையாளமாக, வில்லன் ரத்தினவேலுவை (பகத் பாசில்) தனது நாயகனாக கொண்டாடுகிறது. இது ஆபத்தானது.
இந்தச் சூழ்நிலையில் தான் நாம் அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ் அவர்களின் சிலைகளை, அவர்களது அரசியலை, கருத்தியலை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

மார்க்சுக்கு முழு உருவச் சிலை வைக்கக் கோரும் முயற்சி...நல்ல முயற்சி;
இந்த முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.
வெற்றி பெறும் என நம்புகிறேன்.

மார்க்ஸ் அவர்களின் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டு செயல்படும் கட்சிகளையும் தோழர்களையும் கொண்டு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.
இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தமிழக அரசிற்கு நாம் கோரிக்கை வைக்கிறோம்.
அந்தக் கோரிக்கையை வலியுறுத்த திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தொமுச தொழிற்சங்கத் தலைவர் சண்முகம் நம்முடன் இருப்பது நல்ல வாய்ப்பே.

இந்த முயற்சி கைகூட, சிபிஐ எம்எல் கட்சி நிதி உள்ளிட்ட அனைத்து வகையிலும் இணைந்து நிற்கும் என்று உறுதி கூறி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். மார்க்ஸ் புகழ் நீடூழி வாழ்க!


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

நன்கொடை தாரீர்!!

# மணிப்பூரின் முடிவில்லா வன்முறைக்கும் மக்களின் சொல்லமுடியாத துயரத்திற்கும் பாஜக அரசாங்கங்களே பொறுப்பு

– கிருஷ்ணவேணி

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து, பிரதிமா எங்கீபி (கர்பி ஆங்லாங் இககமாலெ தலைவர், மற்றும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக துணைத் தலைவர்), பிபேக் தாஸ் (இககமாலெ அஸ்ஸாம் மாநிலச் செயலாளர்), சுசேதா தே (இககமாலெ மத்தியக் குழு உறுப்பினர், டெல்லி), கிளிஃப்டன் டி ரோஜாரியோ (இககமாலெ கர்நாடகா மாநிலச் செயலாளர்), அவனி சோக்சி (இககமாலெ தலைவர், கர்நாடகா), மதுலிகா டி (அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம்) டு சரஸ்வதி (தலித் மற்றும் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர், கர்நாடகா) மற்றும் கிருஷ்ணவேணி (அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், தமிழ்நாடு) ஆகிய 8 பேர் கொண்ட குழு கடந்த ஆகஸ்டு 10 முதல் 14 வரை பல்வேறு தரப்பு மக்களை சந்தித்து பேசினோம். மணிப்பூர் முழுவதும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் நிவாரண முகாம்களுக்கு சென்று பார்வையிட்டோம். மணிப்பூரிலும் மத்தியிலும் உள்ள இரட்டை எஞ்சின் பாஜக அரசாங்கங்கள் உருவாக்கியுள்ள அரசியல் குழப்ப நிலை கண்டு இந்தக்குழுவினர் அதிர்ச்சியடைந்தோம். இம்பால் பள்ளத்தாக்கு, காங்போக்பி, சுராசந்த்பூர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களையும் நிவாரண முகாம்களையும் குழுவினர் பார்வையிட்டோம். அந்தக் குழுவினர் மணிப்பூர் கவர்னர் திருமதி அனுசுயா உய்கே அவர்களை சந்தித்து மணிப்பூரில் நிலவும் ஆபத்தான நிலைமைகளை எடுத்துரைத்தோம்.



அக்குழுவினர் கண்டறிந்த உண்மைகள்...

- *மணிப்பூரின் பள்ளத்தாக்கிலும் மலைப்பகுதிகளிலும் மெய்தி மற்றும் குக்கி சமூகங்களுக்கு இடையேயான முன்னெப் போதுமில்லாத இந்த இனப் பிரிவினையானது இந்தியாவின் 75வது சுதந்திர நாளில் நாட்டிற்கு பாஜக வழங்கியுள்ள பரிசாகும். பொது சமூகங்கள் இடையேயான சமூக இழைகளை ஊடறுத்து, ஒரு மாநிலத்திற்குள் இருந்த அனைத்து சமூக மக்களும் இரு இனப் பிரிவினைக்குள் அடங்கிவிட்ட நிலையினை வேடிக்கைப் பார்க்கும் ஒரு அரசாங்கத்தை இந்திய வரலாற்றில் இதுவரை பார்த்ததில்லை. இதற்கு முன்பும் கூட இனக்கலவரங்கள் நடைபெற்றுள்ளது. அப்போது எல்லாம் கலவரம் அடங்கியவுடன் அக்கம் பக்கமாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் சேர்ந்து வாழவே முடியாதென்று சூழலை உருவாக்கியது இந்த இரட்டை என்ஜின் அரசாங்கங்கள்தான்.*

* மலைகளில் வாழும் குகி இன பழங்குடிகள் அனைவருமே கிறிஸ்துவர்களாக இருக்கிறார்கள். பள்ளத்தாக்கு பகுதியில் வாழும் மெய்தேய் இன மக்கள் பெரும்பகுதி இந்துக்களாகவும், சிறு பகுதியினர் கிறிஸ்துவர்களாகவும், இஸ்லாமியயர்களாகவும் இருக்கிறார்கள். மெய்தேய் இன மக்களின் பழங்குடிகளாக தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கு ஆதரவான நீதிமன்ற தீர்ப்பும், பிரேன்சிங் அரசாங்கத்தின் நிலைபாடும் இரு இன மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. மே 3ஆம் தேதி கலவரம் தொடங்கியது. அதற்குப் பிறகு இரு இன மக்களிடையே பெரும் பிரிவினை ஏற்பட்டுள்ளது. எந்தளவிற்கு என்றால் குகி இன ஆண்மெய்தேய் இன பெண் ஆகிய இருவரும் கணவன்மனைவியாக இருந்தால் அவர்கள் ஒன்றாக வாழ அனுமதிக்கப் படவில்லை. அவரவர் இனத்தோடுத் தான் வாழ நிர்ப்பந்திக்க படுகிறார்கள். அவர்களின் குடும்ப வாழ்க்கை கேள்விக்குள்ளாகியுள்ளது. கிறிஸ்துவர்களாக இருக்கும் மெய்தேய் இன மக்கள் 'தாய் மதத்திற்கு திரும்புதல்' என்ற சடங்குகளை செய்யவும், இல்லையென்றால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்று சங்கிகளால் அச்சுறுத்தப் படுகிறார்கள். மூன்று மாதங்களாக தொடரும் இந்த வன்முறையை கட்டுப்படுத்தாதன் மூலம் தான் ஒரு திறமையற்ற முதலமைச்சர் என்பதை பிரேன்சிங் நிரூபித்திருக்கிறார் என்றால் பிரதமர் மோடி அவர்களோ பற்றி யெரியும் மணிப்பூரை தவிர்த்து விட்டு பிரான்ஸ்க்கும், அமெரிக்காவிற்கும் பறந்து கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்தில் மணிப்பூர் பிரச்னைக்கு பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரின் பரிதாபகரமான பதில் என்பது ஒரு விரிவான அரசியல் தீர்வினை கொடுப்பதில் அவர்கள் திவாலாகி இருப்பதை வெட்ட வெளிச்சமாக்கி யுள்ளது.
* நிவாரண முகாம்களில் உள்ள நிலைமை கவலையளிப்பதாக உள்ளது. பள்ளத்தாக்கு முழுவதும் மலைகளிலும் உள்ளூருக்குள்ளேயே இடம்பெயர வேண்டிய நெருக்கடிக்கு ஆளான ஆயிரக்கணக்கான மக்கள் விரக்தியான சூழ்நிலையில் வாழ்க்கையை நடத்துகின்றனர். அடிப்படை தேவைகளுக்கான சேவைகள் போதுமான அளவிற்கு இல்லை. போதிய ஏற்பாடுகள் எதையும் செய்துதராமல் பாதிக்கப்பட்ட மக்களை இந்த அரசாங்கம் கை கழுவி விட்டு விட்டது.
* மணிப்பூர் பள்ளத்தாக்கில் இடம்பெயர்ந்த மெய்தி இன மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிவாரண முகாம்களை பார்த்தால் அதிர்ச்சியளிக்கிறது. இம்பாலின் மையப் பகுதியில் உள்ள ஷியாமசாகி உயர்நிலைப் பள்ளியில் உள்ள நிவாரண முகாமில், அரிசி மற்றும் பருப்பு வழங்குவதோடு கூடுதலாக மாநில அரசால் ஒரு நபருக்கு ரூ.80/- மட்டுமே வழங்கப்படுகிறது. இது நிச்சயம் போதுமானதல்ல. தற்போது ஒரு சந்தையில் அமைக்கப்பட்டுள்ள மொய்ராங் நிவாரண முகாமில் முறையான வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என்பதையும் குழுவினர் கவனித்தனர். இந்த முகாமில் உள்ள மக்களுக்கு இன்று வரை ஒரு நபருக்கு ரூ.500/- மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளது. அகம்பாட்டில் பள்ளி வளாகத்தில் இயங்கி வரும் நிவாரண முகாமும் கூட போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது. சுராசந்த்பூரில் உள்ள இளைஞர் விடுதியில் தன்னார்வலர்களால் நடத்தப்படும் நிவாரண முகாம்களில் உள்ள அறைகளில் நெரிசல் அதிகமாக இருப்பதால், தொற்று நோய்கள் வேகமாக பரவத் தொடங்கியுள்ளன. இந்த முகாமில் அம்மை, சின்னம்மை, வைரஸ் காய்ச்சல் ஆகியவை அன்றாடம் நிகழும் யதார்த்தமாக மாறியுள்ளது. சுகாதாரமும் மோசமாக உள்ளது. இந்தக் குழு பார்வையிட்ட முகாம்கள், ஒவ்வொன்றிலும் 500 பேர் வரை உள்ளூருக்குள் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு போதுமான கழிப்பறை வசதிகள் செய்து தரப்படவில்லை. பெரும்பாலான நிவாரண முகாம்கள் தங்கியிருப்பவர்களுக்கு சத்தான உணவு வழங்க முடியவில்லை. ஒரு நாளைக்கு இரண்டு முறை அரிசியும் பருப்பும் மட்டுமே வழங்கப்படுகிறது. காங்போக்பியில் உள்ள நிவாரண முகாமிலும் மக்களுக்கு சரியான ஊட்டச்சத்து உணவு வழங்காமலும், சுகாதாரம் இல்லாமலும் இதேபோன்ற சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாவட்டத்தில் ஒரேயொரு தரமுயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் மட்டுமே உள்ளது. அது மாவட்ட மருத்துவமனையாக்கப்பட்டும், அங்கு போதுமான மருத்துவர்களோ பணியாளர்களோ அல்லது மருந்துகளோ இல்லை.

* பள்ளத்தாக்கிற்கும் மலைகளுக்கும் இடையே உள்ள எல்லையாலும் அறிவிக்கப் படாத முற்றுகையாலும் அடிப்படை தேவைகளுக் கான நிவாரண உணவுப் பொருட்கள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட் களின் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதால், மலை மாவட்டங்களில் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள நிவாரண முகாம்களில் உள்ள ஆயிரக்கணக்கான குக்கி இன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது பள்ளத்தாக்கிற்கு வெளியே மெய்திகளின் செயலியக்கத்தையும் பாதிக்கிறது.
* இந்த வன்முறைக்கும் உயிரிழப்புக்கும் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் உடைமை இழப்புகளுக்கும் அரசாங்கமே முழுப் பொறுப் பாளியாகும். இந்த கொடூரமான, மனிதாபி மானமற்ற குற்றங்களை விசாரிப்பதற்கு தேவை யான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்படு வதைக்கூட உறுதி செய்ய உச்சநீதிமன்றம் தலையிட வேண்டியிருந்தது என்பது வெட்கக் கேடானது.

இந்த மனிதாபிமான நெருக்கடிக்கு சாத்திய மான எந்தவொரு அரசியல் தீர்வையும் நோக்கிய பயணத்தின் முதல் படியாக திரு.பிரேன் சிங் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். மோதல் போக்கைக் கைவிட்டு, தற்போதைய முட்டுக்கட்டைக்கு ஒரு தீர்வை காணும் நோக்கில் அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்வதற்கான அறிகுறியாக, நிவாரண முகாம்களில் துன்பப்படும் மக்கள் உரிய முறையில் கவனித்துக் கொள்ளப்படுவதை உறுதிசெய்ய, அனைத்து எதிர்ப்பு மனோபாவத் தையும் விட்டொழிக்க வேண்டுமென பாதிக்கப் பட்ட சமூகங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் குழு மணிப்பூர் கவர்னர் திருமதி அனுசுயா உய்கே அவர்களை சந்தித்து நிவாரண முகாம்களில் நிலவும் அனைத்து பற்றாக்குறை களையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுத்தோம். அதுமட்டுமன்றி எந்த விதமான அரசியல் தீர்வும் செயல்படுத்தப்பட வேண்டுமானால் முதல்வர் பிரேன்சிங் பதவி விலக வேண்டிய தேவை பற்றி எடுத்துரைத்தோம்.

இந்தியாவின் அழகான ஒரு மாநிலம், ஆளும் வர்க்கத்தின் பேராசைகளாலும், அரசியல் சூழ்ச்சிகளாலும் பிளவுபட்டு கிடப்பதை பார்த்து கனத்த இதயத்துடன் அங்கிருந்து கிளம்பினோம்.












## ஆகஸ்ட் 9

# வெள்ளையனே வெளியேறு நாளில் மோடியை ஆட்சியை விட்டு வெளியேற்றிட உறுதியேற்ற தொழிலாளர்கள்






அனைத்து மைய தொழிற்சங்கங்களும் இணைந்து திட்டமிட்டிருந்த பெருந்திரள் அமர்வு நிகழ்ச்சிக்கு 2023 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலை முதலே தொழிலாளர்கள் அணி அணியாக வந்து சேரத் துவங்கினர். எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே மிகப்பெரிய அளவில் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியை வெற்றி கரமாக்க அனைத்து மைய தொழிற்சங்கங் களும் இணைந்து மாவட்ட மாநாடுகள் நடத்தி மக்களி டையே பிரச்சாரம் மேற்கொண்டு தயார்படுத்தி இருந்தனர். நூற்றுக்கணக்கான தெருமுனை கூட்டங்களும் சைக்கிள் பிரச்சாரம், இரு சக்கர வாகன பிரச்சாரம், வேன் பிரச்சாரம், துண்ட றிக்கை விநியோகம், சுவரொட்டி பிரச்சாரம் என பல வடிவங்களில் அனைத்து மாவட்டங் களிலும் பிரச்சார இயக்கங்கள் நடைபெற்றி ருந்தன.

நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்ததால் மாநிலங்களவை உறுப்பினர் மு. சண்முகம் கலந்து கொள்ள இயலவில்லை. அதனால், பெருந்திரள் அமர்வு நிகழ்ச்சிக்கு தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொரு ளாளர் தோழர் நடராஜன் தலைமை வகித்தார். ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் சங்கரபாண்டியன், மாநிலப் பொது செயலாளர் தோழர் ஞானதேசிகன், உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் முதுபெரும் தலைவர் தோழர் குசேலர், சிஐடியு அகில இந்திய தலைவர் தோழர் ஹேமலதா உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்க தலைவர்கள் உரையாற்றினர்.

ஏஐசிசிடியுவின் மாநில சிறப்பு தலைவர் தோழர் இரணியப்பன், தமிழ்நாடு ஜனநாயக கட்டுமானத் தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் தோழர் அந்தோணிமுத்து, ஏஐசிசிடியு மாநில நிர்வாகக்குழு தோழர்கள் பால்ராஜ், முருகன், சதீஷ், திருநாவுக்கரசு, பாலசுப்பிர மணியன், கோவிந்தராஜ், வெங்கடாசலம், சுசீலா, அதியமான், கட்டுமான சங்க மாநில நிர்வாகக்குழு தோழர்கள் ராஜன், சிவராஜ், வெங்கடேசன், இளையராஜா, ஆப்ரகாம் டாஸ்மாக் சங்க மாநில நிர்வாகிகள் சிவா, சந்திர குமார் ஆகியோருடன் மாநில முழுவதுமிருந்து மின்சார வாரியம், நுகர்பொருள் வாணிபக் கழகம், கட்டுமானம், தோல் மற்றும் தோல் பொருள், அமைப்பு சாரா தொழிலாளர்கள் என பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஏஐசிசிடியு பதாகையின் கீழ் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய தொழிற்சங்க தலைவர்கள் உழைக்கும் மக்கள் மீது அடுக்கடுக்கான தாக்குதலை தொடுத்து வரும் ஒன்றிய மோடி அரசைக் கடுமையாகச் சாடினர். மணிப்பூர், ஹரியானா கலவரங்களுக்கு மத வெறி பிடித்த மோடி ஆட்சியே காரணம் என குற்றம் சுமத்தினர். 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

கார்ப்பரேட் ஆதரவு மதவெறி பாசிச மோடி ஆட்சிக்கு முடிவுகட்ட தொழிலாளர் வர்க்கம் தம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும் என அறைகூவல் விடுத்தனர்.

வரும் ஆகஸ்ட் 24 டெல்லியில் அனைத்து மைய தொழிற்சங்கங்களும் விவசாயிகள் போராட்ட முன்னணியும் இணைந்து மாபெரும் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது இந்திய வரலாற்றில் தொழிலாளி விவசாயி ஒற்றுமைக்கான மற்றுமொரு மைல் கல்லாக அமையும்.

ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக அடுத் தடுத்த மிகப்பெரிய மக்கள் போராட்டங்களுக்கு தொழிற்சங்க இயக்கம் தயாராகி வருகிறது.

### 14 அம்ச கோரிக்கைகள்:

- ◆விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து!
- ◆பொதுத்துறையை தனியாருக்கு தாரை வார்க்காதே!
- ◆தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளை திரும்பப் பெறு!
- ◆நிரந்தர வேலைகளில் பணி புரியும் நிரந்தரமற்ற தொழிலாளர்களை நிரந்தரம் செய்! சம வேலைக்கு சம ஊதியச் சட்டத்தை அமல் படுத்து!
- ◆10 விழுக்காட்டிற்கு மேல் தற்காலிக தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தாதே!
- ◆இந்த பத்து விழுக்காடு தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 28,000 என நிர்ணயம் செய்!
- ◆ வருங்கால வைப்பு நிதி ஓய்வூதிய தொகையை குறைந்தபட்சம் ரூ.10,000 ஆக்கிடுக!
- ◆விவசாய விளைப் பொருள்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்து கொள்ள சட்டம் இயற்று!
- ◆அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டங்களை விரிவாக்கம் செய்!
- ◆பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மீதான கலால் வரியை நீக்கு!
- ◆அநியாய அபராதம் விதிக்கும் மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தைத் திரும்ப பெறு!
- ◆சுங்கச்சாவடிக் கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி கொள்ளையை கைவிடு!
- ◆கல்வி, மருத்துவம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உத்தரவாதம் செய்!
- ◆ எதிர்கால சந்ததியினருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பை உத்திரவாதம் செய்! ❑



புதுச்சேரி மாநிலத்தில் ஆகஸ்ட் 9 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏஐசிசிடியு அகில இந்திய துணைத் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன் உரையாற்றினார்

களஆய்வு

# இன்னொரு சாதியாதிக்கப் படுகொலை!

**சிம்சன்**

திருநெல்வேலி மாவட்டம் திசையன் விளையில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த முத்தையா, நாடார் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை காதல் செய்தார் என்பதற்காக படு கொலை செய்யப்பட்டார். முதலில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கொலை வழக்காக பதிவு செய்திருந்த காவல்துறை, பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மூன்று பேரைக் கைது செய்து சிறையில் அடைந்துவிட்டு, அந்த மூன்று பேரில் முத்தையாவை யார் என்றே தெரியாத சுரேஷ் என்பவரின் தங்கையை முத்தையா கேலி செய்தார் என்பதற்காக இவர்கள் மூவரும் சேர்ந்து கொலை செய்தார்கள் என்று கூறி இப்போது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீக்கி விட்டு, வெறும் கொலை வழக்காக மாற்றியுள்ளது. இந்த திசையன்விளை தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகரின் தொகுதிக்குள் வருகிறது என்பதையும் ஆணவப் படுகொலைகள் தமிழ் நாட்டில் கிடையாது என்று முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கூறியதையும் முத்தையாவின் கொலையோடு தொடர்பு படுத்திப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் தேனி மாவட்டத்தில் சாதியாதிக்கப்படுகொலை ஒன்று நடந்துள்ளது. அதுபற்றி நீதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக கள ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

தேனி மாவட்டம் பெரியகுளம், கும்பக்கரை சாலையிலுள்ள காந்தி நகரில் மாரிமுத்து குடும்பமும் சம்பத் குடும்பமும் அக்கம் பக்கமாய் வசித்து வந்தன. சம்பத்தின் மகள் மகாலட்சுமி. மாரிமுத்துவுக்கும் மகாலட்சுமிக்குமிடையே காதல் வளர்ந்துள்ளது. இருவரும் வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள். மாரிமுத்து பட்டியலின வகுப்பைச் சார்ந்தவர்(பறையர்). மகாலெட்சுமி பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்(கள்ளர்). இவர்கள் இருவரும் பழகுவது அவர்களின் பெற்றோருக்கு தெரிய வந்திருக்கிறது. மகாலெட்சுமியின் பெற்றோர் இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதை விரும்பவில்லை. அதனால், மகாலெட்சுமிக்கு 18 வயது முடியாத காரணத் தைக் காட்டி 2022ல் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மாரிமுத்துவை போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையிலடைத்தனர். அதே காரணத்தைப் பயன்படுத்தி பெரியகுளம் காவல் துறை உதவியுடன் இரண்டு முறை மாரிமுத்துவை சிறையிலடைத்துள்ளனர். மகாலெட்சுமியை சிறிது நாட்கள் காப்பகத்தில் வைத்திருந்துவிட்டு பின் அவரது பெற்றோருடன் இருக்க காவல்துறை வழி காட்டியது. காவல் ஆய்வாளர் மேற்படி மகாலெட்சுமியின் சமூகத்தைச் சார்ந்தவராய் இருந்ததால் மகாலெட்சுமியின் பெற்றோருடன் சேர்ந்து காதலர்களைப் பிரிப்பதில் கண்ணும் கருத்தாய் இருந்தார். தொடர்ந்து மாரிமுத்துவை மிரட்டி வந்துள்ளார்.

18 வயது பூர்த்தி ஆனவுடன் மாரிமுத்துவைத்தான் திருமணம் செய்து கொள்வேன் எனத் தீர்மானகரமாக இருந்தார் மகாலெட்சுமி. இதனை காவல்துறையிடமும் நீதிமன்றங்களிலும் பலமுறை பதிவு செய்துள்ளார். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத மகாலட்சுமியின் தந்தை சம்பத், தாயார் பேச்சியம்மாள், அக்காள் கணவர் பாண்டி ஆகியோர் மகாலெட்சுமியை அடித்துத் துன்புறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மகாலெட்சுமியைத் தங்கள் வழிக்கு கொண்டு வரப் பெரும் முயற்சி எடுத்தனர். பெரியகுளம் காவல்துறையினர் இயன்றவரை மகாலெட்சுமியின் மனதை மாற்றவும் மாரிமுத்துவை மிரட்டிப் பணிய வைக்கவுமே முயன்றுள்ளார்கள். மகாலெட்சுமியின் அக்காள் கணவர் பாண்டி, மாரிமுத்துவையும் மகாலெட்சுமியையும் கழுத்தறுத்து கொன்று விடுவேன் எனப் பகிரங்கமாகப் பேசியுள்ளார்.

தனக்கு 18 வயது பூர்த்தியாகச் சில மாதங்களே இருந்த நிலையில் நான் காப்பகத்தில் இருக்கிறேன் எனப் பெற்றோரிடமும் காவல் துறையிடமும் வேண்டுகோள் வைத் துள்ளார் மகாலட்சுமி. அவரது வேண்டுகோளை யாரும் கண்டு கொள்ளவில்லை. இந் நிலையில் தான் 5.08.2023 அன்று காலை 7.00 மணி அளவில் கும்பக்கரை செல்லும் வழியில் உள்ள மாந்தோப்புக்குள் மாரிமுத்துவும் மகாலெட்சுமியும் சடலமாக மரத்தில் தொங்கிக் கொண்டு இருப்பதை மக்கள் பார்த்துள்ளார்கள். அவர்களுடைய மரணம் பல கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்புகிறது.

✹ சடலங்கள் இரண்டும் தரையைத் தட்டி கால் தரையில் பட்டவாறு இருப்பது தற்கொலையாக இருக்க வாய்ப்பில்லை என்பதை உணர்த்துகிறது.

✸ மாரிமுத்துவின் பெற்றோர்கள் இது தற்கொலை அல்ல கொலை என கொடுத்த புகார் மனு மீது காவல்துறை எந்த விசாரணையும் செய்யவில்லை.

✸ மகாலெட்சுமியின் பெற்றோர் மற்றும் அவரது அக்காள் கணவர் மீது மாரிமுத்துவின் தாயார் மாலையம்மாள் கொடுத்த புகார் மனு முறையாக விசாரிக்கப்படவில்லை

✸ மகாலெட்சுமியின் தாயார் பேச்சியம்மாள் தனது புகாரில் இருவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள் என்று கூறி இருந்தும் மகாலெட்சுமியின் உடலைப் பெற்றோர்களிடம் ஒப்படைக்காமல் அவசர அவசரமாகக் காவல் துறையே எரித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஏன் அவ்வாறு எரிக்கப்பட வேண்டும்?

✸ இதுபோன்ற வழக்குகளில் பிணத்தைப் புதைக்கத்தான் வேண்டுமேயொழிய எரிக்கக் கூடாது. மறுவிசாரணை நடந்து இது கொலை என்கிற உண்மை வெளியே வந்து விடக் கூடாது என்பதற்காகவே எரித்துள்ளார்கள் என்ற சந்தேகம் வலுக்கிறது.

✸ பெண் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் பிரேத விசாரணை நடத்தவில்லை, ஏன்?

✸ வன்கொடுமை மற்றும் கொலைக்கான அனைத்துக் கூறுகளும் இருப்பினும் சந்தேக மரணம் என வழக்கமான பாணியில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

✸ மாரிமுத்துவின் தாயாரின் புகாரின் படி இது கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. உடற் கூறாய்வு சட்டப்படி வீடியோ பதிவு செய்யப்படவில்லை. மாவட்ட தலைமை மருத்துவர்களைக் கொண்டு உடற்கூராய்வு செய்யப்படவில்லை. அவசர கதியில் ஆதாரங்களை மறைக்கும் விதத்தில் நடத்தப்பட்டிருக்கிறது. எதை மறைக்க? யாரைக் காப்பாற்ற?

✸ இம் மரணமே சாதிப் பகைமையால் ஏற்பட்டிருப்பது கண்கூடாகத் தெரிந்திருந்தும் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படாதது ஏன்?

இப்படியான பல கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விடையை தெரிவிக்க வேண்டியது ஆளும் அரசின் கடமையாகும்.

பெண் காவல் ஆய்வாளர் பெண் வீட்டாரின் இனத்தைச் சேர்ந்தவராய் இருப்பதால் ஆரம்பத்திலிருந்தே இக்காதலை முறித்து விட வேண்டும் என முழு மூச்சுடன் வேலை செய்துள்ளார். இவரே விசாரணை அதிகாரியாய் இருப்பாரே யானால் உண்மைக் குற்றவாளிகள் தப்பி விடுவார்கள். ஆதாரங்கள் அழிக்கப்படும். ஏற்கனவே பெண்ணின் பிணத்தையும் எரித்து விட்டார். எனவே விசாரணை அதிகாரி மாற்றப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, மாரிமுத்துவின் தாயார் கொடுத்த புகாரின் அடிப்படையில், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு ஒரு நேர்மையான காவல்துறை துணை கண்காணிப்பாளரை உடனடியாக விசாரணை அதிகாரியாக அரசு நியமிக்க வேண்டும். வன் கொடுமைச் சட்டத்தின் அடிப்படையில் மாரிமுத்துவின் பெற்றோருக்கு நிவாரணமும் நீதியும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

இதேபோல் வட்டாட்சியரும் பெண் வீட்டாருக்குச் சாதகமாகச் செயல்படுவதால் அவரையும் பணியிட மாற்றம் செய்ய வேண்டும். சட்ட விதிகளின் படி மாவட்டத் தலைமை மருத்துவர் குழுவினர் மூலம் மாரிமுத்துவின் உடலை உடற் கூறாய்வு செய்யப்பட வேண்டும். முழுமையாக வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும். எந்த அடிப்படையில் மகாலட்சுமியின் உடல் எரிக்கப்பட்டது? என்பதையும் மகாலெட்சுமியின் பெற்றோர் உடலைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தனரா? இல்லையா? அவர்கள் ஒப்புதலுடன்தான் காவல்துறையே உடலை எரித்ததா? அல்லது தன்னிச்சையாக எரித்ததா? என்பதையெல்லாம் கோட்டாட்சியர் மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மையை வெளிக் கொணர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஓராண்டிற்கு மேலாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. அரசு, காவல்துறை அதிகாரிகள் தெரிந்தே சாதியாதிக்க உணர்வுடன் செயல்பட்டுள்ளார்கள். இது கடும் கண்டனத்திற்குரியது. இப்படிப்பட்ட மரணங்கள் நிகழ்வதற்கு அரசு அதிகாரிகளின் சாதியாதிக்க உணர்வும் அலட்சியமும்தான் காரணம். இம்மாதிரி அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். எஸ்சி.எஸ்டி ஆணையம் இது போன்ற வழக்குகளைத் தாமாக முன்வந்து விசாரித்து நீதியை நிலை நாட்ட வேண்டும். பெரியார், அண்ணாவின் பெயரில் ஆட்சி நடத்தும் அரசு, சமூக நீதி பேசும் அரசு, சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் ஆணவப்படுகொலைகள் இல்லை என்று சொன்னதற்காக, உண்மைகளை மறைக்க முயற்சிப்பதோ, சாதியாதிக்க சமூகத்தின் வாக்குகளுக்காக செயல்படுவதோ நீதியாகாது. ❑

# இந்தியாவில் உள்ள விவசாயிகள் இயக்கம் உலகெங்கிலும் உள்ள மக்கள் இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் ஒரு உத்வேகத்தை அளித்துள்ளது

(தஞ்சாவூரில் 11.8.23ல் நடந்த விவசாயிகள் விடுதலை முன்னணி மாநாட்டில், ஏஐகேஎம் மாநிலத் தலைவர் சிம்சன், மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன், சிபிஐஎம்எல் மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, அயர்லா மாநில நிர்வாகி வளத்தான், கன்னையன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக, அகில இந்திய விவசாயிகள் மகாசபை மாநில ஊழியர் கூட்டமும் நடைபெற்றது. விவிமு மாநாட்டில் எஸ்கேஎம் தேசிய ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர், ஏஐகேஎம் தேசிய செயலாளர் தோழர் புருசோத்தம் சர்மா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் சுருக்கம்)






*அன்பிற்கினிய தோழர்களே! விவசாயிகளே!*

*அகில இந்திய விவசாயிகள் மகாசபை, ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பாக உங்கள் அனைவருக்கும் வணக்கம்! லால் சலாம் -செவ்வணக்கம்!*

*எனக்கு தமிழ் பேசத் தெரியாது. எனது ஆங்கிலமும் சுமாராகவே இருக்கும். எனவே எனது மொழி பயன்பாட்டில் ஏதேனும் தவறு இருந்தால் என்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆனாலும் நாம் அனைவரும் நமது பொதுவான பார்வையாலும் குறிக்கோளாலும் ஒன்றுபட்டுள்ளதால், நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியும், தோழர்களே!*

*நான் 1982-ல் இந்திய மக்கள் முன்னணியில் (ஐபிஎஃப்) இருந்தபோது, தண்ணீர், வணக்கம், மக்கள், முன்னணி போன்ற சில தமிழ் வார்த்தை களைக் கற்றுக்கொண்டேன். ஐபிஎஃப் மற்றும் அதன் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்ட போது, தந்தை பெரியாரையும் பார்ப்பனியத்திற்கு எதிரான திராவிட இயக்கம் பற்றியும் படித்தேன்.*

*பார்ப்பனியத்திற்கும் சாதிய அமைப்புக்கும் எதிராக தமிழகத்தில் நடந்த இந்த இயக்கங்கள், இந்தியா முழுமைக்குமான பெரும் உத்வேகத்தை அளித்து வருகின்றன. இந்த இயக்கம் தென்னிந்திய மக்களின் வாழ்வில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் பார்ப்பனியத்தின் பிரதிநிதியான ஆர்எஸ்எஸ்- பாஜக தனது முழு வலிமையை உபயோகித்த பின்பும் தென்னிந்தி யாவில் வேரூன்ற முடியாமல் போனதற்கு இதுவே காரணமாகும்.*

*தோழர்களே!*

*இன்று நாம் அனைவரும் விவசாயிகளின் ஒன்றுபட்ட மேடையான ஐக்கிய விவசாயிகள் முன்னணி என்ற பதாகையின் கீழ் நாடு முழுவதும் ஒன்றுபட்டுள்ளோம். நாட்டிலுள்ள விவசாய அமைப்புகள் ஒரே மேடையில் வர வேண்டுமென்ற உந்துதலை தமிழக விவசாயிகள் கொடுத்தனர். 2017ம் ஆண்டு விவசாயிகள் சந்தித்த இழப்புகள் மற்றும் விவசாயிகளின் தற்கொலைகள் என்ற பிரச்சினையின் மீது பி.அய்யாக்கண்ணு தலைமையிலான தமிழக விவசாயிகள் டெல்லியில் இயக்கம் நடத்தினர். அதே நேரத்தில் நாடு முழுவதும் உள்ள விவசாய அமைப்புகள் ஒரே மேடையில் அணி திரள்வது குறித்து ஆலோசித்தனர்.*

*இன்று இந்தியாவின் விவசாயம் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. அமெரிக்க கார்ப்பரேட் வகை மாதிரியை நோக்கி இந்திய விவசாயம் தள்ளப்படுகிறது. இந்த வகைமாதிரி நமது நிலம், சாகுபடி, உணவு சேமிப்பு, விநியோக முறையை பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதைத் தவிர*

வேறொன்றுமில்லை. இதற்காகவே மோடி அரசாங்கம் மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்தது. ஆனால் நாட்டின் விவசாயிகள், தொழிலாளர்கள், உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட இயக்கம் விவசாயிகளுக்கு எதிரான இந்தச் சட்டங்களை திரும்பிப் பெறுவதற்கு அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கியது. பசுமைப் புரட்சியின் போதுதான் நமது விவசாயம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்காக திறந்து விடப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். இன்று நமது விதை சந்தையில் 75 சதவீதத்தை மான்சாண்டோ போன்ற இரண்டு பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் கைப்பற்றி யுள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்கள் நமது விதைச் சந்தையை கட்டுப்படுத்துகின்றன. விதைகள் கார்ப்பரேட்மயமாக்கப் பட்டதால் நமது பாரம்பரிய விதைகள் அழிந்துவிட்டன. இதே போன்ற கார்ப்பரேட் ஏகபோகம் பூச்சிக்கொல்லிகள், விவசாய இயந்திரங்கள் விஷயத்திலும் காணப்படுகிறது. கார்ப்பரேட் ஏகபோகமும் கொள்ளையடிப்பும்தான் நமது விவசாயச் செலவு அதிகரிப்பதற்குக் காரணமாகும்.

2000 ஆம் ஆண்டில், பாஜக தலைமையிலான வாஜ்பாய் அரசாங்கம் விவசாயப் பொருட்களின் இறக்குமதி மீதான அளவு கட்டுப்பாடுகளை நீக்கியது. இது மானிய விலையில் இறக்குமதி செய்யப்பட்ட வேளாண் விளைபொருள்களை கொண்டு வருவதற்கு வழிவகுத்தது. இதனால், நமது விவசாயிகள் தங்கள் விலையை விட மிகக் குறைவான விலையில் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

உலகம் முழுவதும் விரக்தியின் விளிம்பில் இருக்கும் போது, இந்தியாவில் உள்ள விவசாயிகள் இயக்கம் உலகெங்கிலும் உள்ள மக்கள் இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் ஒரு உத்வேகத்தை அளித்துள்ளது. மத்திய தொழிற் சங்கங்கள் மற்றும் எஸ்கேஎம் ஆகியவற்றின் போராட்டங்களுக்கான ஒரு கூட்டு மேடையையும், விவசாயிகள் இயக்கம் அமைத்துக் கொடுத்தது. வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் இயக்கத்தின் போது விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை மத்திய அரசு நிறைவேற்ற வில்லை. குறைந்தபட்ச ஆதரவு விலை உத்தரவாதச் சட்டம், லக்கிம்பூர் விவசாயிகள் கொலையின் முக்கிய சதிகாரரான மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா தேனியின் பதவி நீக்கம், விவசாயிகள் இயக்கத்தின் போது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுவது, விவசாயிகள் கிராமப்புற தொழிலாளர்களின் கடன் தள்ளுபடிகள், புதிய மின்சார திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறுதல் போன்ற பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

மேலும் குத்தகைதாரர்களுக்கு விவசாயிகளின் அந்தஸ்து வழங்குதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் 200 நாள் வேலையும் நாள் கூலி ரூபாய் 600 வழங்குதல், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடும் விவசாய நிலமும் வழங்குதல், நாட்டின் அனைத்து ஏழை மக்களுக்கும் அவர்களின் தேவைக்கேற்ப பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அனைத்தும் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றையும் நாம் கோருகிறோம். இப் பிரச்னைகளில் நமது போராட்டம் தீவிரமடையும்.

கார்ப்பரேட் கம்பெனிகளின் லாபத்துக்காக நமது விவசாய நிலங்கள், வனங்கள், ஆறுகள் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டு மக்கள் தங்களின் பூர்வீக நிலங்களில் இருந்தும் வீடுகளில் இருந்தும் வெளியேற்றப்படுகிறார்கள். தமிழகத்தின் சென்னை–சேலம் விரைவுச்சாலைக்கு எதிராக நமது விவசாயிகள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், விவசாயிகளின் கருத்தைக் கேட்காமல் பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காக அதை செய்து முடிக்கவுள்ளது அரசாங்கம். தமிழகத்திலும் கூட நிலக்கரி, மீத்தேன், ஹைட்ரோகார்பன், ரயில்பாதைகள், நெடுஞ்சாலைகள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த அறிவியலற்ற, சுற்றுச்சூழலுக்கு எதிரான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஆகஸ்ட் 29ம் தேதி தமிழகத்திலும் எஸ்கேஎம் மாநில கருத்தரங்கம் நடக்கிறது. நவம்பர் 26, 27, 28 ஆகிய தேதிகளில் விவசாயிகளின் மூன்று நாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும். எதிர்வரும் நாட்களில் இந்தப் போராட்டங்களில் நமது போராடும் தமிழக விவசாயிகளும் தீவிரமாகப் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தோழர்களே! மோடி ஆட்சியில் ஜனநாயகமும் அரசமைப்புச் சட்டமும் பாசிச தாக்குதலின் கீழ் உள்ளது. இந்த பாசிச தாக்குதலுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சி சக்திகளும் ஒரு பொது மேடையில் ஒன்றுபட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், பாசிசத்தை தோற்கடிப்பதற்கான இந்த இயக்கத்தில் இந்திய தொழிலாளர்களும் விவசாயிகளும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

இந்தியாவில் தற்போதுள்ள பாசிச அமைப்பை வேரோடு அகற்றுவதில் தமிழக விவசாயிகள்தொழிலாளர்கள் முன்னணிப் பங்காற்றுவார்கள் என்பதில் நாம் உறுதியாக நம்பிக்கையுடன் இருக்கிறோம். உங்கள் அனைவருக்கும் நன்றி! ❑

# தோழர்கள் சந்திரகுமார்சந்திரசேகர், சுப்பு தியாகிகள் பெயரால் உறுதி ஏற்போம்! கார்ப்பரேட் காவிப்பாசிசத்தை தோற்கடிப்போம்!!

*தஞ்சை மண்ணில் நிலப்பிரபுத்துவ கொடுமைகளுக்கு எதிராக.. பாட்டாளி வர்க்க விடுதலைக்காக கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மிகப்பெரிய விலை கொடுத்தது வரலாறு. '40 கள் தொடங்கி '60 கள் வரை செங்கொடி ஏந்திய பல தலைவர்கள், தொண்டர்கள் பலர் வீரமரணம் அடைந்துள்ளனர்.*

*தோழர்கள் வாட்டாக்குடி இரணியன் களப்பால் குப்பு, இன்னும் பலர் நிலவுடைமை ஆதிக்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். இதன் உச்சமாக, கீழ் வெண்மணியில் பெண் கள், குழந்தைகள், ஆண்கள் என 44 விவசாயக் கூலிகள் குடிசையில் வைத்து கொளுத்தப் பட்டார்கள்.*

*புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் புரட்சிகர கூலி, ஏழை விவசாயிகள் இயக்கத் தையும் முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக, '70கள் தொடங்கி '90கள் வரை தோழர்கள் அப்பு முதல் சுப்பு வரை வீரமரணமடைந்தார்கள். மேலத் தஞ்சையில் திருப்பனந்தாள் ஒன்றியம், மணலூர் பகுதியில் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக பாடுபட்ட தோழர்கள் சந்திர குமார், தோழர் சந்திரசேகர் ஆகியோர் நிலவு டைமை ஆதிக்கத்தால் 1984, செப்டம்பர் 2 அன்று, அதிமுக ஆட்சி காலத்தில், மிகக் கொடூ ரமாக படுகொலை செய்யப்பட்டனர்.*

*கொடூரமான சாதி ஆதிக்க நாடு அதிகாரத் துக்கு எதிராக தலித் உழைக்கும் மக்களது சுயமரியாதை, சமத்துவத்துக்காகப் போராடி மக்கள் எதிரிகளால் 1994 செப்டம்பர் 13 அன்று படுகொலை செய்யப்பட்டார் மாடக் கோட்டை (சிவகங்கை) தோழர் சுப்பு. இந்தப் படுகொலை யும் அதிமுக ஆட்சி காலத்திலேயே நடை பெற்றது.*

*புரட்சிகர கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சிக் காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தோழர்கள் சந்திரகுமார் சந்திரசேகர் நினைவு நாளான செப்டம்பர் 2 தொடங்கி தோழர் சுப்பு நினைவுநாளான செப்டம்பர் 13 வரை மணலூர் (தஞ்சாவூர் மாவட்டம்) தொடங்கி மாடக் கோட்டை (சிவகங்கை மாவட்டம்) வரை பரப்புரை பயணம் நடத்தப்பட உள்ளது.*

*தோழர் சந்திரசேகர் தோழர் சந்திரகுமார் நினைவு நாளான.. செப்டம்பர் 02 அன்று அவர்களது நினைவிடத்தில் (மணலூர்) அஞ்சலி செலுத்தப்படும். தோழர் சந்திரகுமார் பிறந்த ஊரான பெருந்தோட்டத்திலிருந்து (மயிலாடுதுறை மாவட்டம்) தோழர்கள் பரப்புரை நிகழ்வாக சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம் வழியாக மணலூர் வந்துசேர்கிறார்கள். அங்கு அஞ்சலி செலுத்திவிட்டு ஆடுதுறை, திருமங்கலக்குடி வழியாக திருப்பனந்தாள் வந்தடைகிறது. பிற்பகல் 4. 00 மணிக்கு திருப்பனந்தாள் நகரில்,*

*நிலம், வேலை, கவுரவம், ஜனநாயகம் பெறப் போராடுவோம்!*

*கார்ப்பரேட் காவிப் பாசிச மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்!*

*என்ற முழக்கத்துடன்*

*"நினைவேந்தல் பொதுக்கூட்டம்"*

*நடக்கிறது. அந்தக் கூட்டத்தில் இகக(மா லெ),அவிகிதொச தலைவர்களுடன் இடதுசாரி கட்சிகள், விசிக உள்ளிட்ட ஜனநாயக முற்போக்கு ஆளுமைகளும் பங்கு பெறுகிறார்கள்.*

*மக்களுக்காகவும், கட்சிக்காகவும் தனது குடும்பத்தில் ஒருவரை இழந்து அளப்பரிய தியாகம் செய்த தோழர் சந்திரசேகர், தோழர் சந்திரகுமார் ஆகியோரது குடும்ப உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கவுரவிக்கப்பட உள்ளனர்.*

*திருப்பனந்தாளில் தொடங்கும் பரப்புரை பயணம், கும்பகோணம் பாபநாசம் வழியாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங் களின் முக்கிய ஊர்கள் வழியாக செப்டம்பர் 13 அன்று மாடக்கோட்டை சென்றடையும். மாடக் கோட்டை தோழர் சுப்பு நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் மாலை தோழர் சுப்பு அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு தேவகோட்டையில் நடைபெற உள்ளது.*

*இந்த பரப்புரை பயண காலத்தில் மேற் கண்ட அய்ந்து மாவட்டங்களிலும் நூற்றுக் கணக்கான ஊராட்சிகளில் 'மக்கள் சந்திப்பு'*

நிகழ்ச்சிகள் பெரிய அளவில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. பரப்புரை பயணத்திற்கு வரவேற்பு நிகழ்ச்சிகள் நடத்துவதோடு, தீப்பொறி சந்தா சேர்ப்பு, பெண்கள் கழக மாவட்ட மாநாடுகள் நடத்துவது, சென்னை மாணவர்-இளைஞர் ஆர்ப்பாட்டத்துக்கு அணிதிரட்டுவது, நிதி திரட்டுவது உள்ளிட்ட பணிகளும் திட்டமிடப் பட்டுள்ளன.

இந்த பயணத்தின் போது ஆங்காங்கே "இன்டியா" கூட்டணியைச் சேர்ந்த தலைவர்கள், ஜனநாயக ஆளுமைகளை அழைத்துப் பேச வைப்பதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பரப்புரை பயணம் கிராமப்புற மக்கள் மத்தியில் மிகப்பெரிய விழிப்புணர்வை உண்டாக்கும் விதமாக இருக்கவும் கிராமப்புற இயக்கத்தில் ஒரு புதிய முன்னேற்றத்துக்கான அடித்தளத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய திட்டமிட்டு செயல்பட வேண்டுமென்றும் உணரப்பட்டது. அன்றைய காலத்தில் கொடூர மான நிலப்பிரபுத்துவ சக்திகளை எதிர்த்து தீவிரமான போராட்டங்களை நடத்தினோம். இன்றைய மாறியுள்ள சூழலில், 'செங்கோல்' என்ற பெயரிலும் ராஜாக்கள் பெருமையிலும் இந்துத்துவ மதவெறி சக்திகள் உக்கிரம் பெற்று வருகின்றன. இதன் பின்னால், பிரபுத்துவ சாதி ஆதிக்க சக்திகள் அணிதிரண்டு வருகின்றன. இந்த மக்கள் விரோத சக்திகளை தோற்கடிப்பதே தோழர்கள் அப்பு, பாலன், மச்சக்காளை, சந்திரசேகர் சந்திரகுமார், சுப்பு இவர்களின் போராட்ட மரபாகும். இதுவே நமது தியாகி களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி யாகவும் இருக்கும்.

பரப்புரை பயணம் செல்லும் ஊராட்சிகள் தயாரிப்புக் கூட்டங்களை விரிவாக நடத்தி மேற்சொன்ன கடமைகளை வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும். பொது நிகழ்ச்சிகளில் தீப்பொறி சந்தா, நிதியளிப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

**தியாகிகள் சந்திரகுமார் – சந்திரசேகர், சுப்பு பெயரால் உறுதி ஏற்போம்!**

**பரப்புரை பயணத்தை வெற்றி பெறச் செய்வோம்!**

**கார்ப்பரேட் காவிப் பாசிச மோடி ஆட்சியை விரட்டியடிப்போம்!**

**– ஆசைத் தம்பி**

# விலையில்லா வீடு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்




நாமக்கல் ஈரோடு மாவட்டம், பள்ளிபாளைம் ஒன்றியக் கமிட்டியின் சார்பாக, வீடில்லாத விசைத்தறி, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு விலையில்லா வீடு வழங்கக் கோரி சிபிஐஎம்எல்– ஏஐசிசிடியு சார்பாக நினைவூட்டல் மனு கொடுக்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் ஊர்வலமாக சென்று வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்டது. வட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் வந்து ஒவ்வொருவரிடமும் நேரடியாக மனுக்களைப் பெற்றுக்கொண்டார். மனு கொடுத்தவர்களில் தினசரி 20 பேரை பள்ளிபாளையம் கிராம நிர்வாக அலுலகத்திற்கு அழைத்து வரும் படியும் நேர்முக ஆய்வின் அடிப்படையில் கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப் பட்டது. தோழர் வெங்கடேசன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், மாவட்டக்குழு உறுப்பினர்கள் தேன்மொழி, கார்த்திகேயன், ராஜாராம், சிபிஐ எம்எல் மாவட்டச் செயலாளர் பொன்.கதிரவன் ஆகியோர் கோரிக்கையை விளக்கி பேசினர்.

# தமிழ்நாட்டிலும் தலைவிரித்தாடும் சாதியாதிக்க வெறித் தாக்குதல்கள், படுகொலைகள்

**ரமேஷ் கணபதி**

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் சாதியாதிக்க வெறித் தாக்குதல்களும் படுகொலைகளும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இரண்டு மாதத்திற்குள் சுமார் 10 கொலைகள் நடந்துள்ளன. தென்காசி மாவட்டத்தில் பஞ்சாயத்து ஊழியர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே வைத்து படுகொலை செய்யப்பட்டார். புளியங்குடி தங்கசாமி கைது செய்யப்பட்டு சிறையில் மர்ம மரணமடைந்தார். நெல்லை மாவட்டம் திசையன்விளையில் முத்தையா என்கிற அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர் கடந்த ஜூலை 23 அன்று இரவு படுகொலை செய்யப்பட்டார். இவர் நாடார் சமூகத்தைச் சேரந்த பெண்ணை காதலித்து வந்துள்ளார். வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டு பின்னர், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மூவரைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டு வெறும் கொலை வழக்காக மாற்றியுள்ளார்கள். இது சாதியாதிக்கப்படுகொலை அல்ல என்றும் வன்கொடுமையும் இல்லை என்றும் காட்டும் வகையில் கொலைக்கு சம்பந்தமே இல்லாத பட்டியல் சாதியைச் சேர்ந்த மூவரை வழக்கில் சேர்த்துள்ளார்கள். மூவரில் இருவருக்கு முத்தையாவை யார் என்றே தெரியாதாம். அதில் சுரேஷ் என்பவரின் தங்கையைக் கேலி செய்ததால் முத்தையாவைக் கொலை செய்ததாக வழக்கு பதியப்பட்டுள்ளது. அந்தக் கொலை நடந்து சில நாட்களுக்குள் நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் உள்ள பெருந்தெரு பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த 12ம் வகுப்பு மாணவர் சின்னதுரையை அவரோடு படிக்கும் (மறவர்) ஆதிக்க சாதியைச் சேர்ந்த 3 மாணவர்கள் சின்னதுரையின் வீடுபுகுந்து, சாதியைச் சொல்லி அவதூறாகப் பேசி, தாயார் கண் முன்னேயே சாப்பிட்டுக் கொண்டிருந்த சின்னதுரையை தலை முதல் கால் வரை வெட்டி கொலை வெறித் தாக்குதல் நடத்திவிட்டு சாவகாசமாகச் சென்றுள்ளார்கள். தடுக்கப்போன அவரது தங்கை 14 வயது சந்திரா செல்வியையும் வெட்டியுள்ளனர். இச் சம்பவத்தைப் பார்த்த சின்னதுரையின் தாத்தா, சின்னதுரை தாயாரின் சித்தப்பா அவ்விடத்திலேயே மரணமடைந்துள்ளார். சின்னதுரை படிப்பு மற்றும் விளையாட்டில் முதலாவதாக வந்துள்ளார். அவர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியவர் சின்னதுரையை தங்களுடைய கையாள் மாதிரி நடத்தியுள்ளார்கள். தங்களுடைய பையைத் தூக்கிக் கொண்டு வரச் சொல்வது, பீடி, டீ வாங்கி வரச் சொல்வது என இழக்காரமாக நடத்தியுள்ளனர். இதனால் மனம் வெறுத்த சின்னதுரை, வள்ளியூரில் தான் படித்த கண்கார்டியா மெட்ரிக் பள்ளிக்குச் செல்லாமல் இருந்துள்ளார். அதனால் அவரது தாத்தாவும் தாயாரும் பள்ளி தலைமை ஆசிரியரிடம் சொல்ல, அந்த ஆதிக்க சாதி மாணவர்களை தலைமை ஆசிரியர் கண்டித்ததைத் தொடர்ந்து, இந்த கொலை வெறித் தாக்குதலை அரங்கேற்றியுள்ளார்கள்.

சின்னதுரை அதிர்ஷ்டவசமாக மரணமடையவில்லை என்பதால் உண்மை வெளியே வந்துள்ளது. ஒரு வேளை அவர் மரணமடைந்திருந்தால், முத்தையா வழக்கைப் போல, உண்மைக் குற்றவாளிகளைத் தப்பிக்க வைத்து, கதையை மாற்றியிருப்பார்கள். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மத்தியிலேயே சாதியாதிக்க வெறி ஆழமாக வேரூன்றியுள்ளது. தலையில் சாதி அடையாள ரிப்பன் கட்டுவது, கையில் சாதி அடையாளக் கயிறு கட்டுவது என்பதெல்லாம் வீட்டில் இருந்தும் சாதியத் தலைவர்களிடத்தில் இருந்தும் ஆரம்பமாகிறது.

சின்னதுரை மீதான கொலை வெறித் தாக்குதல் நடந்து நான்கு நாட்களுக்குள் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டைக்கு அருகில் உள்ள கீழ நத்தத்தில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் மறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் அவரது தந்தை கண் முன்னேயே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். அவர் அந்த ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் குடித்து விட்டு வரும் வழியில், அவர்களைப் பார்த்தவுடன் எழுந்திருக்காமல் வாய்க்கால் பாலத்தில் உட்கார்ந்து இருந்தாராம். உடனே என்னடா எங்களைப் பார்த்து முறைக்கிறாய்

என்று சாதியைச் சொல்லி திட்டியிருக்கிறார்கள். நான் சும்மாதானே உட்கார்ந்திருக்கிறேன் என்று கூற, வெட்டிக் கொன்றுள்ளார்கள். அவரது மனைவி 25 வயதுதான் ஆகிறது, ஏரோனாடிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களுக்கெல்லாம் காரணம் மாரிசெல்வராஜின் மாமன்னன் படம்தான் என்றும் எப்போதோ நடந்தவற்றை இப்போது காட்டி சாதி வெறியை தூண்டுகிறார்கள் மாரி செல்வராஜுும் ரஞ்சித்தும் என்கிறார் புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி. ஆர்எஸ்எஸ் சங்கிகளுடன் சனாதன ஜோதியில் ஐக்கியமாகி விட்ட கிருஷ்ணசாமியும் எஸ்சி எஸ்டி பட்டியலில் எங்களை வெளியேற்றுங்கள் என்று சொல்லும் சிலரும் மாஞ்சோலை போராட்டத்தின் போதும் கொடியன்குளம் சாதியாதிக்கத் தாக்குதல்போதும் இருந்த அதே நிலைதான் இன்றும் தொடர்கிறது என்பதை தங்களின் பிழைப்புக்காக மறைக்கப் பார்க்கிறார்கள் என்பது மட்டுமின்றி, பாசிச ஆர்எஸ்எஸ்-பாஜகவிடம் சரணடைந்து ஜால்ரா போட்டு தங்களைத் தலைவர்களாக்கிய மக்களுக்குத் துரோகமிழைக் கிறார்கள். கிருஷ்ணசாமி போன்றவர்கள் கவுண்டர், தேவர், நாயக்கர் என்று ஆதிக்க சாதி பெருமை பேசி சினிமா எடுக்கும்போது அதைக் கண்டு கொள்ளவில்லை. கொடியங்குளம் சம்பவங்களின் போது, அதை சாதிக் கலவரம் என்று எல்லாரும் சொன்னபோது, இது சாதிக் கலவரம் அல்ல, பட்டியலின மக்களின் முன்னேற்றத்தை தடுக்கும் சாதியாதிக்க வெறித் தாக்குதல் என்றும் காலங்காலமாக ஒடுக்கப் பட்டவர்களின் தற்காப்புக்கான பதில் வினை என்றும் சொன்னது இகக(மாலெ).

பாஜகவினர் சின்னதுரை மீதான தாக்குதல் சாதியாதிக்கத் தாக்குதல் இல்லை, மாணவர்க ளுக்குள் ஏற்பட்ட 'ஈகோ பிரச்சனை' என்று திசை திருப்பப் பார்க்கிறார்கள். இதை நிலை நிறுத்தும் விதமாக சின்னதுரையின் தாயாரிடம் எல்லாரும் ஒன்றாக வீட்டிற்கு வந்து சாப்பிட்டவர்கள்தான் என்று புதிதாக சொல்லச் சொல்லிக் கொடுத் துள்ளார்கள். இதற்கு சில சொந்த சாதி இடைத் தரகர்களும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர் களுமே துணை போகிறார்கள் என்பதுதான் வேதனையான விசயம்.

ஆகஸ்டு 17ம் தேதி தூத்துக்குடி மாவட்டம், கோவில் பட்டி அருகேயுள்ள கழுகுமலையில் 11ம் வகுப்பு படிக்கும் பட்டியல் சாதி மாணவர் மீது ஆதிக்க சாதியினர் 10 பேர் சேர்ந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இரண்டு மாணவர்களுக் கிடையே பேருந்து நிறுத்தத்தில் வைத்து ஏற்பட்ட தகராறை இந்த மாணவர் சமாதானப்படுத்தினார் என்பதற்காக, எங்களைச் சமாதானப்படுத்த நீ யார் என்று சொல்லி தாக்கியுள்ளார்கள். சாதியாதிக்க கொலை வெறித் தாக்குதலும் படுகொலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

நான்குநேரி சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு, நீதிபதி சந்துரு அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத் துள்ளது. இந்த ஆணையம் நிச்சயம் சரியான ஒரு தீர்வைக் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், ஆணையத்தின் முடிவுகளை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு அரசிடம் இருக்கிறது. ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து போடப்பட்ட நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் முடிவுகளும் பரிந்துரைகளும் இதுவரை அமல்படுத்தப்படாமல்தான் இருக் கின்றன. குற்றவாளிகளான காவல்துறையினர் காப்பாற்றப்பட்டு வருகிறார்கள்.

ஆர்எஸ்எஸ்-பாஜகவின் சனாதன நிகழ்ச்சி நிரலை அமல்படுத்துபவர்களாக சாதியச் சங்கங்களும் முதலாளித்துவக் கட்சிகளில் உள்ள சில தலைவர்களும் காவல்துறையில் உள்ள அதிகாரிகளுமே இருந்து கொண்டிருக்கிறார்கள். புளியங்குடி தங்கசாமி மரணத்தை வன்கொ டுமைத் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதியாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை திமுகவைச் சேர்ந்த எம்எல்ஏவே பார்த்துக் கொண்டார். சாதியாதிக்க வெறியானது கட்சி சார்பின்றி எல்லா கட்சிகளிலும் நீக்கமற நிறைந்துள்ளது. இப்போது சாதியாதிக்கம் செய்பவர்கள் ஒரு காலத்தில் தங்கள் சாதிப் பெயரைச் சொல்வ தற்குக் கூட கூச்சப்பட்டார்கள். ஆனால், இப்போதே ஆண்ட பரம்பரை என்று ஆதிக்க சாதி பெருமை பேசிக் கொண்டு, காலங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களை எழுந்து வருவதைத் தடுக்க வேண்டும் என்றும் அவர் களைத் தாக்குவது மட்டுமின்றி, ஊரைக் தீயிட்டுக் கொழுத்திஅவர்களின் பொருளா தாரத்தை அழிக்க வேண்டும் என்றும் வெளிப்ப டையாகவே பேசுகிறார்கள். இந்த தைரியம் அவர்களுக்கு எப்படி வந்தது? ஒருபுறம் ஆர்எஸ்எஸ் சங்கிகளின் வளர்ச்சி என்றால் மறுபுறம் இதுபோன்ற கயவர்களை உடனடி யாகக் களையெடுக்கத் தயங்கும் திராவிடக் கட்சி ஆட்சியாளர்கள்தான் இதற்குக் காரணம். ❑

## நான்குநேரி சின்னத்துரை மீதான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

நான்குநேரி சின்னத்துரையும் தங்கை சந்திரா செல்வியும் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் சாதி வெறிக்குக் காரணமானவர்களையும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் கைது செய்யக் கோரியும் பள்ளி, கல்லூரிகளில் தலைவிரித்தாடும் சாதி வெறியைத் தடுத்து நிறுத்தி, சமத்துவத்தையும் சகோதரத்து வத்தையும் நிலைநாட்டக் கோரியும் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் சார்பாக திருநெல்வேலி டவுன் வாகையடிமுனையில் கண்டன ஆர்ப்பாட்டம் 13.8.2023 அன்று காலை 11 மணிக்கு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் சங்கரபாண்டியன், வழக்கறிஞர் ஜி.ரமேஷ், சிபிஎம் நெல்லை நகர இடைக்கமிட்டி உறுப்பினர் நாராயணன், திராவிட தமிழர் கட்சி பொதுச் செயலாளர் கதிரவன், இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் கணேசன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கருப்பசாமி, ரவி டேனியல், வைகுண்டராஜன், மாரிமுத்து, அந்தோனிராஜ், செல்வம் மற்றும் சிவகாமிநாதன், செல்வகணபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## தூய்மை பணியாளர்கள் போராட்டம்.

தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த முறையை, அவுட்சோர்சிங் முறையை ஒழித்துக் கட்ட வேண்டும் எனவும் திமுக அரசு தனது தேர்தல் வாக்குறுதியான பணி நிரந்தரம் செய்ய வேண்டும், சம வேலைக்கு, சம ஊதியத்தை வழங்க வேண்டும். மேலும் தொழிலாளர் விரோத அரசாணையான 10, 139, 152ஐ ரத்து செய்ய வேண்டும் என்றும் ஏஐசிசிடியு உள்ளிட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக கருப்பு கொடி ஊர்வலம் ஆகஸ்ட் 10 அன்று கோவையில் நடைபெற்றது. தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு சார்பாக மாநகராட்சி ஆணையாளரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆணையாளர் அவுட்சோர்சிங் முறை அரசின் கொள்கை முடிவு தன்னால் எதுவும் செய்ய முடியாது என்றும், மேலும் புதிய அவுட்சோர்சிங் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதாக சொன்னார். தொழிற்சங்கங்கள் சார்பாக அவுட்சோர்சிங் முறையை ஏற்க முடியாது. அரசே நேரடியாக சம்பளம் வழங்க வேண்டும் என்றும் இது தொடர்பாக வரும் செப்டம்பர் 15 அன்று வேலைநிறுத்தம் நடைபெறும் என்றும் சொல்லப்பட்டது. தொழிலாளர்கள் மத்தியில் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் கூட்டமைப்பு சார்பாக அன்றைய கருப்பு கொடி ஊர்வலம் போராட்டத்திற்கு முடிவுக்கு கொண்டு வந்து வேலைநிறுத்தத்திற்கு தயாராக வேண்டும் என்பதையும் எடுத்து சொல்லப்பட்டது.

## டேன் டீ தொழிலாளர்கள் போராட்டம்

கோவை வால்பாறையில் செயல்படும் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகமான டேன் டீயில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 30.07.23 அன்று தமிழ்நாடு அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்ச ரூ 425.40 ஊதியத்தை இதுவரை வழங்கவில்லை. இதை அமுல்படுத்த இதுவரை அரசாணை வெளியிடவில்லை. டேன் டீ நிர்வாகம் தனது பொறுப்பை தட்டிக் கழிப்பதால் தமிழ்நாடு அரசு மற்றும் டேன் டீ நிர்வாகத்தைக் கண்டித்து ஆகஸ்ட் 14 அன்று வால்பாறை சிங்கோனா எஸ்டேட்டில் ஏஅய்சிசிடியூ சார்பாக தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு வால்பாறை பொறுப்பாளர் தோழர் கே.ரஞ்சித் தலைமை தாங்கினார். தோழர் பாலசுப்பிரமணியன், தோழர் வெங்கடாசலம், தோழர் நாராயணன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். தோழர் செல்லதுரை நன்றியுரை கூறி போராட்டத்தை நிறைவு செய்தார். ஆகஸ்ட் 14க்கு அடுத்தடுத்த நாட்களிலும் போராட்டம் தொடர்ந்தது. காலையில் வேலைக்கு செல்லும் போதும், மாலை வேலை முடிந்ததும் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்த போராட்டம் இதுவரை 7 டிவிசன்களில் நடைபெற்று வருகிறது. இதில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் 12 டிவிசன்களில் வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களையும் திரட்டி செப்டம்பரில் வால்பாறையில் தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## புரட்சிப் பாடகர் கத்தாருக்கு செவ்வஞ்சலி!



உழைக்கும் மக்களின்
வாழ்க்கைப்பாடுகளை, விடுதலைக்
கனவுகளை புரட்சிகர கலை இலக்கிய
இயக்கமாக்கிக் காட்டியவர்,
ஆந்திரா,தெலுங்கான மாநிலங்களின்
புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின்
பண்பாட்டு தூதுவர், தனது குரல் வீச்சை
தமிழ்நாடு வரை பரப்பி இளைஞர் மத்தியில்
எழுச்சிக் கனவை விதைத்தவர் கத்தார்.
அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின்
சார்பாக தனது புகழஞ்சலியை
செலுத்துகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட்)

## மூன்று சட்ட மசோதாக்களை திரும்பப் பெறக் கோரி ஆர்ப்பாட்டம்




*முப்பெரும் சட்டங்களை மாற்றுவதைக் கண்டித்தும் இந்தி-சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துள்ளதைக் கண்டித்தும் அமித்ஷா தாக்கல் செய்துள்ள மூன்று சட்ட மசோதாக்களையும் உடன் திரும்பப் பெற வலியுறுத்தியும் 18.8.2023 திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வாயில் முன்பு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ), சமூக நீதிக்கான வழக்கறிஞர்கள் (LSJ), அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் (AILU) சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.ரமேஷ் தலைமை தாங்கினார். திருநெல்வேலி வக்கீல் சங்க முன்னாள் செயலாளர் ப.செந்தில்குமார், அகில இந்திய வழக்கறிஞர் சங்க மாநிலக் குழு உறுப்பினர் கு.பழனி முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க மாநிலக்குழு உறுப்பினர் அப்துல் நிஜாம், அகில இந்திய வழக்கறிஞர் சங்க மாநில நிர்வாகி முபாரக் அலி, மாவட்டச் செயலாளர் முருகன், திமுக வழக்கறிஞர் அணி மாவட்டத் தலைவர் ராஜா முகமது, மாவட்ட அமைப்பாளர் காமினி தேவன், மூத்த வழக்கறிஞர் இராமநாதன் மற்றும் வழக்கறிஞர்கள் ஆரிப், பரமசிவன், ரிஸ்வானா, மாலதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.* ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.08.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# நீதி கேட்டு போராட்டங்கள்...










Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh